சதாதமிழ்



தமிழ் பொழுதுபோக்கு

From
www.sadatamil.blogspot.com

## முன்னுரை:

சில வருடங்களுக்கு முன்பு ஆனந்தவிகடன் வாரஇதழ், தனது 75 வருட பாரம்பரியத்தின் அடையாளமாக, ‘பவள விழா கொண்டாட்டம்’ என்ற தலைப்பில், போட்டிகள் பல நடத்தி, பரிசுகளை அள்ளி, அள்ளி வழங்கியது.

சில போட்டிகளில் நானும் கலந்துகொண்டேன். ‘உயிர்ப்பு’ என்ற கவிதைக்கும், ‘கவனம்’ என்ற கவிதைக்கும் தலா 2000 ரூபாயும், ‘தாய்மை’ என்ற குட்டிக்கதைக்கு 3000 ரூபாயும் பரிசாகக் கிடைத்தது. மேலும் அவ்வப்போது எனது நகைச்சுவைத் துணுக்குகளும் வெளிவந்தது உண்டு.

விகடன் தந்த ஊக்கத்தால், கவிதைகளும், குட்டிக்கதைகளும் நிறைய எழுதினேன். ஆனால் அவை பிரசுரம் ஆகவில்லை. அவை பிரசுரம் ஆகவில்லையே என்ற வருத்தத்தையும் விகடனே போக்கியது.

ஆனந்தவிகடனில் வெளிவரும் ‘வருங்கால தொழில்நுட்பம்’ என்ற தொடர் கட்டுரையின் ஒரு பகுதி, பிளாக்கைப்பற்றி (BLOG) விவரமாக அலசியது. அது என்னுள் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுக்க, இந்த பிளாக்கை எழுதஆரம்பித்தேன்.

நான் M.C.A படித்திருந்தாலும், பிளாக்கைப் பற்றி அறிந்திருந்தாலும், இந்த பிளாக்கை எழுதத்தூண்டியது விகடனே. விகடனுக்கு நன்றி.

விகடனில் வெளிவந்த எனது சிறுபடைப்புகளை படிக்க ஆர்வம் உள்ளவர்களுக்கு, அவற்றை இ-மெயிலில் அனுப்ப ஆர்வமாக உள்ளேன்.

இப்படிக்கு
சே. சதாசிவம்

தொடர்புக்கு:
srisadasivam@gmail.com

பொருளடக்கம்:

சிறுகதைகள்:


1. தேனில் குழைத்த மருந்து
2. தொழில்
3. அடம்
4. போர்
5. கம்பீரம்
6. காதல்
7. ம்
8. நேயர் விருப்பம்
9. சீச்சீ
10. புனைப்பெயர்


அனுபவங்கள்:


1. ரேடியோ மிர்ச்சியுடன் ஒரு அனுபவம்
2. கம்ப்யூட்டர் உருவான வரலாறு
3. திக்... திக்... தீம்பார்க்
4. மோர்
5. காதோடுதான் நான் பேசுவேன்....


கவிதைகள்:


1. தவிப்பு
2. வசியம்
3. சும்மா
4. அறிவிப்பு


நகைச்சுவை துணுக்குகள்.

## தேனில் குழைத்த மருந்து

ராசாத்தி தன்னுடைய ஒன்றரைவயது குழந்தையைத் தூக்கிக்கொண்டு அவசரமாய் குடும்ப வைத்தியரிடம் சென்றாள்.

நகரின் பிரபலமான மருத்துவத்தம்பதியின் வீடு அது. அங்குதான் ராசாத்தி நெடுங்காலமாய் சமையல் வேலை செய்கிறாள். அதனால் எஜமானியே அவளது குடும்ப வைத்தியர்.

“அம்மா என் குழந்தைக்கு உடம்பு சரியில்லைம்மா.... கொஞ்சம் என்னன்னு பாருங்கம்மா!?”

குழந்தையை பரிசோதனை செய்தார் டாக்டர் தேவகி.

“ராசாத்தி, குழந்தை வழக்கமா என்ன சாப்பிடுவான்?”

“பால், அப்புறம் தண்ணீரில் நனைச்ச பிஸ்கட்....”

“வேறென்ன சாப்பிடுவான்? கொஞ்சம் ஞாபகப்படுத்தி சொல்லு?”

“அம்மா, பொதுவாக குழந்தைகளுக்கு இனிப்பு பிடிக்குமேன்னு இரண்டு, மூணு நாளாக தேன் கொடுத்துட்டு வந்....” என்றவள் அவசரமாய் நாக்கை கடித்துக்கொண்டாள்.

தேவகிக்கு சட்டென்று தன் வீட்டு தேன்பாட்டில் நினைவுக்கு வந்தது. விசயத்தை ஊகித்துக்கொண்டவளாக அவள் பேசினாள்.

“தேன் கொடுத்தியா? அதை ஏன் மறைக்கிறே? ஓ.... நம்ம வீட்டிலிருந்து, உன் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போன தேனா அது?”

வியர்வையில் குளித்த ராசாத்தி, சிறிதுநேரம் கழித்து ஆவேசமாய் பேசினாள்.

“நான் திருடியதைக் கண்டுபிடிக்க, தேனில் எதையோ கலந்து வைச்சிட்டீங்களா....? என்னை தண்டிக்காமல் அநியாயமா என் குழந்தையை தண்டிச்சீட்டிங்களே....! நீங்க நல்லா இருப்பீங்களா?”

“அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டாதே ராசாத்தி. ரொம்ப சின்னக்குழந்தைகளுக்கு தேன் ஒத்துக்கொள்ளாது. சின்னக்குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி ரொம்ப குறைவு. தேனில் நோயை உண்டுபண்ணக்கூடிய கிருமிகள் உண்டு. அதனால கொடுக்கக்கூடாது.”

தெளிந்தாள் ராசாத்தி.

தவறுக்கு மேல் தவறு செய்த தன்னை, தண்டிக்காமல் கண்ணியமான வார்த்தைகளில், தேனில் குழைத்த மருந்தாக, திருத்திய எஜமானியை கண்ணீர்பெருக்கோடு பார்த்தாள் ராசாத்தி.



# தொழில்

குமாருக்கு 'பிக்பாக்கெட்' அடிப்பதுதான் முழுநேரத் தொழில். 'பிஸ்கட்' ஒன்றை தண்ணீரில் கரைத்து, ஒரு சிறிய டப்பாவில் எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டான் அவன்.

ஆள்அரவமற்ற தெருவில், வெள்ளைச்சட்டை அணிந்த ஒருவர், நடந்து சென்றுகொண்டிருந்ததை அவன் கவனித்தான். அவரது சட்டைப்பையில் ரூபாய் நோட்டுக்கள் இருப்பது அவனுக்கு அப்பட்டமாக தெரிந்தது.

வெள்ளைச்சட்டைக்காரரை ரகசியமாக பின்தொடர்ந்த குமார், கையிலிருந்த 'பிஸ்கட் ' கரைசலை, அவர் அறியாவண்ணம் அவரது சட்டையின் பின்புறம்படுமாறு முதுகில் தெளித்தான். கொஞ்சநேரம் அவரையே பின் தொடர்ந்த அவன், பிறகு அவரிடம் நைசாக பேச்சுக் கொடுத்தான்.

"அண்ணே! உங்க சட்டையில் ஏதோ 'அசிங்கம்' ஒட்டிக்கிட்டு இருக்கு."

அவரது கவனம் முழுமையாக சட்டையின் பின்பக்கம் செல்லும்போது, முன்புறமிருக்கும் சட்டைப்பையிலிருந்து ரூபாய் நோட்டுக்களை லாவகமாக திருடிவிடவேண்டுமென்பது அவன் எண்ணம்.

"ஆமாம் தம்பி, அசிங்கமேதான்!" நின்று கவனித்து ஆமோதித்தார் அவர்.

"அண்ணே, கொஞ்சம் இருங்க, நான் தொடச்சி விடறேன்." என்ற அவன் சுற்றும் முற்றும் பார்த்தபடி படபடப்புடன் அவரை நெருங்கினான்.

அவர் அவசரமாக மறுத்தார்.

"வேணாம் தம்பி! உங்களுக்கு எதுக்கு சிரமம்? நானே வீட்டில்போய் தொடச்சு கழுவிக்கிறேன். மலத்தோட புழங்கறதுதான் என்னோட தொழிலே.... என்ன பார்க்கறீங்க! வீடுகளில் இருக்கிற 'செப்டிக் டேங்க்கை' க்ளீன் பண்ணித்தர்றதுதான் என்னோட வேலையே.... அதைவிடுங்க,

எப்படி இப்படி ஆச்சுன்னு தெரியலயே! இன்னிக்கு நான் தொழிலுக்குக்கூட போகலயே!? ”

அவர் பேசிக்கொண்டே போக, குமாருக்கு முகத்திலடித்தாற்ப்போல இருந்தது. அவன் தனது ஈனத்தொழிலை கைவிட முடிவுசெய்தான்.



## அடம்

அழுது அடம்பிடித்தாவது இன்று பள்ளிக்கு மட்டம் போட்டுவிடவேண்டுமென்றது மணிகண்டனின் மனம். என்ன செய்யலாம் என்று யோசித்தவனுக்கு ‘சட்டை அணியா போராட்டம்’ என்றொரு புதிய திட்டம் தோன்றியது. சீருடைச்சட்டையை அணிந்துகொள்ள மறுத்து அடம்பிடித்தால், வெட்கப்பட்டு(!?) தந்தை தன்னை பள்ளிக்கு அனுப்பமாட்டார் என்று உறுதியாக நம்பி, அவன் அந்த திட்டத்தை செயல்படுத்தினான்.

அவனுடைய தந்தை சேகர் அதற்கெல்லாம் மசியவில்லை. சட்டை அணியாவிட்டாலும் பரவாயில்லை என்று அவனை அப்படியே தெருவில் கூட்டிக்கொண்டு போனார்.

“மணி, நானும் உன்னைப்போல இரண்டாவது வகுப்பு படிக்கும்போது பள்ளிக்கூடத்திற்கு சட்டை இல்லாமல் போயிருக்கேன். ஆனால், காரணந்தான் வேற.... எங்கப்பா ஒரு விவசாயி. ஒரு வறட்சியான காலகட்டத்தில் வறுமையில் ரொம்ப கஷ்டப்பட்டோம். சட்டை வாங்கக்கூட காசு இல்லையின்னு எங்கப்பா என்னை பள்ளிக்கூடத்துக்கு போக வேண்டான்னுட்டார். ஆனாலும், நான் சட்டைகூட போடாமல் பள்ளிக்கூடத்துக்குப் போனேன். ஏன் தெரியுமா? மதிய நேரத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவை வாங்கி சாப்பிடறதுக்காக....எங்க வாத்தியார் அவரோட கைக்காசைப்போட்டு சட்டை வாங்கிக்கொடுத்தார்.

அப்புறம் கொஞ்சம், கொஞ்சமாக கல்வியோட அருமை புரிஞ்சு, படிச்சு இன்னைக்கு நல்ல வேலையில் இருக்கேன். உனக்கு எல்லா வசதிகளும் இருந்தும் இப்படி அடம் பிடிக்கிறாயே....!” தந்தையின் வருத்தம் மகனை பாதிக்கவில்லை.

“அப்பா, நாளையில் இருந்து ஒழுங்காக போறேன். இன்னைக்கு ஒருநாள் மட்டும் லீவு போட்டுக்கிறேன். ப்ளீஸ்ப்பா....”

மகனுடைய கோரிக்கையை மறுத்து, சட்டை அணியாவிட்டாலும் பராவயில்லை என்று அவனை வலுக்கட்டாயமாக அவனது வகுப்பில் தள்ளினார் சேகர்.

அங்கே கண்ட காட்சி மணிகண்டனை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

அங்கே அவனுடைய சகமாணவர்கள் சட்டை அணியாமல் வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.

“சார், பசங்களுக்கு தோல்நோய் ஏதும் இருக்கான்னு ‘செக்’ பண்றோம். உங்க பையனையும் வரிசையில் நிக்கச்சொல்லுங்க....” என்றார் வகுப்பாசிரியர்.

சேகர் மகனைப்பார்த்து சிரித்தார்.

# போர்

## புத்திப்போர்:

கருணைக்கொலை செய்வது பாவம்தான் என்ற கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்தும் சிறுகதையை படித்ததிலிருந்து, ராஜாவுக்கு மனஅழுத்தம் மேலும் அதிகமானது.

தீராதநோயில் விழுந்து, பல மாதங்களாக அவதிப்பட்டு இறந்த, காதல் மனைவியை, நினைவுபடுத்தும் பொருட்களையெல்லாம் நீலநிறப்பை ஒன்றில் சேகரித்துக்கொண்டு ஊரின் எல்லையை நோக்கி பயணமானான் ராஜா.

## மனப்போர்:

“ராசா, வயிறு பசிக்குதா?”

“ராசான்னு சொல்லாதே.... ராஜான்னு சொல்லு.”

“வயிறு வலிக்குதா?”

“தெரியலை. வயிறு பசிக்குதா, வயிறு வலிக்குதான்னே தெரியலை. ஆனால் வயித்துல ஏதோ கோளாறு இருக்கு.”

“அது சரி. இன்னிக்கு சரக்கு வாங்க பணமில்லையே! என்ன செய்யறது?”

“தெரியலை. ஆனால் கண்டிப்பா ஏதாவது வழி பிறக்கும். எல்லாமே விதிப்படிதான் நடக்கும்.”

“வழி பிறந்திடிச்சு. அதோ தூரத்தில் யாரோ வர்றமாதிரி தெரியுது.”

“ஆமாமா. தனியா ஒருத்தன் வர்றான். வசமா மாட்டிக்கிட்டான். கையில் ஏதோ பை வச்சிருக்கான்.”

“கொஞ்சம் இரு. ஆள் வாட்டசாட்டமா இருக்கானே! சமாளிக்க முடியுமா?”

“சரக்கு வாங்கணுமே! வர்றான்....”

“கத்தி வச்சிருக்கியா?”

“பெரிய கத்தி இருக்கு. சின்னதும் இருக்கு.”

“இது எத்தனாவது ஆள்?”

“பதிமூணு.... இல்லை. பதனாலு.... ஏய், கணக்கெல்லாம் பார்க்காதே. கணக்கு பார்க்கிறது பாவம்.”

“தெம்பு இருக்கா?”

“சரக்கு வாங்கணுமே.... நெருங்கி வர்றான்.... ”

“ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்காது. இன்னிக்கு ஏதோ தப்பா நடக்கப்போகுது.”

“இங்கதான் வர்றான். மரத்துக்கு பின்னாடி ஒளிஞ்சிருந்து திடீர்னு பாய்ஞ்சு கத்தியால ஒரே குத்து.”

“இரு. வயித்துல ஏதோ கோளாறுன்னு சொன்னே!?”

“இப்போதைக்கு சமாளிக்கமுடியும். அப்புறமா சரக்கடிச்சா சரியாப்போயிடும்.”

“ஆமாமா, சரக்கடிச்சா சரியாப்போயிடும். அன்னிக்கு சட்டுன்னு நொடியில் சரியாப்போச்சே! பயமாயில்லை....?”

“இல்லை.”

**உயிர்ப்போர்:**

நிழலசைவில் உள்ளுணர்வு எச்சரிக்க சட்டென்று நகர்ந்தான் ராஜா. ஏதோ ஒன்று இடித்து, அவன் கொண்டுவந்த நீலநிறப்பை கீழே விழுந்து அதிலிருந்த பொருட்களனைத்தும் சிதறின. தன்னை நோக்கி பாய்ந்த உருவம் கீழே விழுந்து கிடப்பதையும், அதன் கையில் கத்தி இருப்பதையும் கண்ட அவன் பதட்டமானான். ஆனாலும் அந்த உருவத்தின் ஒடிசலான தேகம் கண்டு பயம் விலகி தன்னை ஆசுவாசப்படித்திக் கொண்டான்.

நோக்கம் நிறைவேறாமல், தவறி கீழே விழுந்த ராஜா, எழுந்து மீண்டும் வெறியுடன் பாய்ந்தான்.

அவனை உறுதியாக தடுத்த ராஜா, கத்தியை வெகுலாவகமாக தட்டிப்பறித்தான்.



கத்தியை பறிகொடுத்த ராஜா, ஆங்காங்காங்கே கிழிந்திருந்த சட்டையை விலக்கி, இடுப்பிலிருந்த மற்றொரு கத்தியை எடுத்துக்கொண்டு ஆக்ரோஷமாகப் பாய்ந்தான்.

ராஜாக்கள் இருவரும் கத்தியுடன் சண்டையிட்டனர்.

முடிவில் ஒரு ராஜா, அதிக வலியில்லாமல் சில நொடிகளுக்குள் இறந்தான்.

அந்த சில நொடிகளில் மனஅழுத்தம் குறைவதை அவனால் உணரமுடிந்தது.

---

# கம்பீரம்

வர்த்தக கண்காட்சியில் கூட்டம் அலைமோதியது. மக்களை கவர்வதற்காக ஏராளமான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன.

மிகப்பெரிய மீசை கொண்டவர்களுக்கான போட்டி நேரம் அது. பெரிய, பெரிய மீசையோடு ஏழு பேர் மேடையில் இருந்தனர். அவர்களில் 82 வயது முதியவரும் அடக்கம்.

போட்டியை நடத்திக்கொண்டிருந்தவர், விவேகமாகவும், நகைச்சுவையாகவும் பேச, கூட்டம் ஆர்ப்பரித்தது.

பிறகு அவர், போட்டியாளர்களை ஒவ்வொருவராக சுயஅறிமுகம் செய்துகொள்ள அனுமதி தந்தார். போட்டியாளர்களின் தோற்றத்திற்கு தகுந்தவாறு கமென்ட் அடித்து பார்வையாளர்களை குஷிப்படுத்தினார்.

“இதோ வந்துவிட்டார்.... சிங்கம் சூர்யா.”

“இதோ வந்துவிட்டார்.... தேவர்மகன் கமல்.”



82 வயது பெரியவரின் முறை வந்தது.

“அனைவருக்கும் வணக்கம். என் பெயர், திரிசங்கு.” என்று தன்னை சுயஅறிமுகம் செய்துகொண்டார் பெரியவர்.

“அதுதான் இன்னும் சங்கு ஊதக்காணோமே....” பெரியவரின் முதுமையை மனதில்கொண்டு கமென்ட் அடித்தார் போட்டி தொகுப்பாளர்.

பார்வையாளர்களின் சிரிப்பால் அரங்கம் அதிர்ந்தது. ஒருசிலர் முகம் சுளித்தனர். பெரியவருக்கு ‘சுருக்’ என்று மனதில் தைத்தது.

போட்டியின் முடிவில் பெரியவருக்கு இரண்டாம் பரிசாக ‘மிக்ஸி’ கிடைத்தது.

போட்டி தொகுப்பாளர், பெரியவரை தனியாக அழைத்துச் சென்று பேசினார்.

“ஐயா, என்னை மன்னச்சிருங்க! யோசிக்காமல் உங்க மனசை புண்படுத்தும்விதமாக கமென்ட் அடிச்சிட்டேன்.”

“விடுங்க தம்பி, அதை நான் பெரிசா எடுத்துக்கலை....”

பெரியவரின் புன்னகை, பெரிய முரட்டு மீசை தந்த கம்பீரத்தைவிட, கூடுதல் கம்பீரத்தைத் தந்தது.

# கா…தல்

பெண்காகம் ஒன்று, அது வழக்கமாக உட்காரும் மின்கம்பியில் அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தது. ஆண்காகம் ஒன்று பறந்து வந்து, அருகிலிருந்த மற்றொரு மின்கம்பியில் அமர்ந்தது.

இளமையின் வாயிலில் அப்போதுதான் நுழைந்திருந்த அவ்விரு காகங்களிடையே, கண்டதும் காதல் தீ பற்றிக் கொண்டது. அவை மகிழ்ச்சியில் கா காவென கரைந்தன.

காதல் எவ்வளவு உன்னதமானது! மனிதர்களாகட்டும், விலங்குகளாகட்டும், பறவைகளாகட்டும் காதல் இயற்கையின் முதல் விதி என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஆண்காகம், அதன் அலகால், பெண்காகத்தின் அலகை மென்மையாகக் கொத்திவிளையாட முயன்றது. கம்பிகளுக்கிடையே இருந்த இடைவெளி காரணமாக அந்த முதல் முத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

முத்தம் எவ்வளவு அற்புதமானது! மனிதன் முத்தமிட்டுக் கொள்வதை பறவைகளிடமிருந்துதான் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

அந்த காகங்கள் கடுமையாக முயன்று ஒன்றையொன்று கூடியமட்டும் நெருங்கி அலகுகளால் தொட்டுக்கொண்டு முதல் முத்தத்தை அனுபவித்தன. அவற்றின் உடலில் மின்சாரம் பாய்வதுபோல் இருந்தது.

முதல் காதல் ஸ்பரிசத்தில் அப்போதே இறந்துவிட வேண்டுமென்ற உன்னதநிலையை அவை அடைந்திருக்கக் கூடும்.



மறுநொடியில் அவற்றின் உடல்கருகி, கால்கள் மின்கம்பிகளை இறுகப்பிடித்தபடி தலைகீழாய் தொங்கின.

தனித்தனி மின்கம்பிகளில் அமர்ந்திருந்த அந்த காகங்கள் ஒன்றையொன்று அலகால் தொட்டுக்கொண்டதன் மூலம், அவற்றின் உடலில் மின்சாரம் பாய அனுமதித்து உயிரிழந்தன. ஹி....ஹி....

## “ ம் ”

“ம்-முன்னு ஒரு வார்த்தை சொல்லு. உன்னை எங்கேயோ கொண்டு போறேன். ”

முதலாளி இதை நான்காவது தடவையாக சொல்கிறார்.

ஒரு முடிவுக்கு வரவேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்ந்தாள் சுமதி.

அழகான தன்னை, அங்கீகாரம் இல்லாத துணைவியாக ஆக்க ‘கார்’, ‘பங்களா’, ‘பாங்க் பேலன்ஸ்’ என ஆசை வார்த்தைகள் காட்டும் முதலாளியைப்பற்றி விதவைத்தாயிடம் பக்குவமாக சொன்னாள் சுமதி.

பகலெல்லாம் யோசித்து, யோசித்து புலம்பிய அந்த பாமரத்தாயின் பேச்சின் சாராம்சம் இதுதான்.

“நல்லாயிருந்த மனுஷனுக்கு, திடீர்னு புத்தி இப்படி கோணலாயிடுச்சே! சரி, பலவருஷமா நமக்கு படி அளந்தவரை பகைச்சுக்க வேணாம். இங்க நமக்கு சொத்தும் இல்லை. சொந்தமும் இல்லை. எங்க போனாலும் நம்மால் பிழைத்துக்கொள்ள முடியும். அதனால வேறு எங்காவது போய்விடுவோம். நமக்கு இந்த ஊரே வேண்டாம். சரின்னு சொல்லுடி. கடவுளே! என் பொண்ணுக்கு குடும்பம், குழந்தைங்கன்னு ஒரு பாதுகாப்பு அமையறவரையிலாவது எனக்கு ஆயுளைக்குடு.”

விசுவாசமா, பயமா, புத்திசாலித்தனமா - அம்மாவின் வார்த்தைகள் சுமதியைக் குழப்பின.

இரண்டு நாட்கள் கழித்து, அம்மாவின் தீர்வில் உள்ள உறுதியை தெரிந்துகொள்ள மீண்டும் கேட்டாள்.

அம்மாவின் ஒரே முடிவு இதுதான்.

“ம்-முன்னு ஒரு வார்த்தை சொல்லு. உன்னை எங்கேயோ கொண்டு போறேன்.”

“ம்” என்றாள் அம்மாவிடம்.

- - - - - - - - - - - - - - - - - - - - - - -

# நேயர் விருப்பம்

“ஹலோ, வணக்கம். உங்க பேர் என்ன?”

“என் பேர் கனகலட்சுமிங்க....”

“எங்கிருந்து பேசறீங்க?”

“தாம்பரத்திலிருந்து பேசறேன்....”

“என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?”

“நானா....? நான் சும்மா, ஹவுஸ் ஒய்ப்தாங்க....”

“அதென்ன தயக்கமாகச் சொல்றீங்க?! ஹவுஸ் ஒய்ப்புன்னா அவ்வளவு இளக்காரமா?! வீட்டை பராமரிக்கிறதும், குழந்தைங்களை கவனிக்கிறதும் அவ்வளவு ஈஸியா என்ன?! எவ்வளவு பொறுப்பு?! எவ்வளவு கஸ்டம்?! சரி, சரி உங்களுக்கு பிடிச்ச பாடல் ஒண்ணு சொல்லுங்க?”

தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நிகழ்ச்சியில் பங்கேற்ற நேயர்களின் பாலினம், வாழும் சூழ்நிலை, மனநிலை அறிந்து, அவர்களின் விருப்பத்திற்கேற்ப இனிமையாகப் பேசி, நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திமுடித்தபின், தொகுப்பாளர் விமலா வீட்டை அடைந்தார்.

“அம்மா....” என்று ஓடிவந்து கட்டிப்பிடித்த குழந்தையை தூக்கிக்கொஞ்சும்போது, விமலாவின் மாமியார் கோபமாகக் கேட்டார்.

“ஏம்மா லேட்டு....?”

“டிராபிக் ஜாம் அத்தை....அதுதான் லேட்டு.”

“ஏம்மா இந்த வேலையை விட்ற வேண்டியதுதானே! இருக்கிற வசதி போதாதா? நீ சம்பாதிச்சு என்ன ஆகப்போகுது?”

“அத்தை....உழைப்புங்கறது பணம் சம்பந்தப்பட்டது இல்லை. அது மனம் சம்மந்தப்பட்டது. ஹவுஸ் ஒய்ப்புங்கிற பேர்ல, வீடுங்கிற சின்ன வட்டத்தில் வாழ்ந்து, வெளியுலகம் தெரியாமல், உழைக்கவேண்டிய அவசியம் புரியாமல், வாழ்க்கையை வீணடிச்சிக்கிற சராசரி பெண் உங்களுக்கு அதெல்லாம் புரியாது....” வெடித்தாள் விமலா.

## சீச்சீ

ரகுவின் இளம்மனைவி சீலா ஒரு சேலைப்பைத்தியம். யார் என்ன கலரில், என்ன டிசைனில் சேலை அணிந்திருந்தாலும், அவள் மனதுக்கு பிடித்துவிட்டால், அதே கலர், அதே டிசைன் உள்ள சேலையை எப்படியாவது அலைந்து, திரிந்து வாங்கி அணிந்துகொள்வாள்.

ஒருமுறை பக்கத்துவீட்டுப்பெண் அணிந்திருந்த சேலை பிடித்துப் போய்விட, அதேமாதிரி சேலையை வாங்கி, இவளும் அணிந்து கொண்டாள். அந்தப் பெண்ணிற்கு வெறுத்துப்போய்விட்டது. எல்லோரும் அணிந்துகொள்ள அது என்ன சீருடையா?

அன்று முதல் அந்தப்பெண், தான் ஆசை, ஆசையாய் வாங்கிய அந்தச்சேலையை அணிவதே இல்லை. அதோடு அவள் சீலாவிற்கு 'சீருடை சீலா' என்று செல்லப்பெயர் வைத்து, அதையும் சுருக்கி 'சீச்சீ ' என்று பட்டப்பெயர் வைத்து தெருவெங்கும் பரப்பினாள்.

வாங்கும் சம்பளத்தில் பாதிக்குமேல், சேலை வாங்குவதற்கு செலவழிக்கப்படுவது தெரிந்ததும், ரகு கொதித்துப் போனான்.

"டிவியில் விளம்பர மாடலாக வரும் சினிமா நடிகை அணிந்திருக்கும் சேலையைப் போலவும் வாங்கிக் கொள்கிறாய்! வீட்டு வேலைக்காரி அணிந்திருக்கும் சேலையைப் போலவும் வாங்கிக்கொள்கிறாய்! சீச்சீ! இப்படி ஒரு சேலைப்பைத்தியத்தை நான் பார்த்ததேயில்லை! "

அவனுடைய கண்டிப்பான வார்த்தைகளில், அவளது பட்டப்பெயர் 'சீச்சீ' எதார்த்தமாக வந்துவிழுந்துவிட, வீட்டில் பெரிய பிரளயமே வெடித்தது.

விளைவு , இருவருக்கும் இடையே மூன்று மாதங்களுக்கும் மேலாக பேச்சுவார்த்தையே இல்லாமல் போய்விட்டது. ரகு ஏங்கிப்போனான். இப்போது அவனுக்கு 'சேலைப்பைத்தியம்' பிடித்துவிடும் போலிருந்தது.

மனைவியின் சேலைப்பைத்தியத்தை தெளியவைக்கவும், அவளோடு சமரசம் ஆகவும் திட்டம்தீட்டி, தகுந்த தருணத்தில் செயல்படுத்தினான்.

அலுவலகம்விட்டு வீடு திரும்பிய ரகு, அடுப்படியில் வேலை செய்துகொண்டிருந்த மனைவியின் அருகில் சென்று, அவளை பின்புறமாக கட்டியனைத்தான். பிறகு முகம்பார்த்து திடுக்கிடுவது போல நடித்தான்.

“ஸாரி, வேலைக்காரின்னு நினைச்சேன்....” என்று சொன்ன ரகு அவசரமாய் நழுவினான். அவன் அளித்த அதிர்ச்சி வைத்தியம் வேலை செய்தது.

வேலைக்காரியின் சேலையைப் போலவே, தான் வாங்கி அணிந்திருந்த சேலையை ஒருமுறை பார்த்துக் கொண்டாள் சீலா. பலத்த யோசனைக்கு பிறகு, அவள் மனம் திருந்தினாள். பிறகு குழப்பத்துடன் கணவனை நெருங்கினாள்.

“ என்னங்க, வேலைக்காரி மேட்டர் .... ” என்றவளிடம் “ஸாரிடா, சும்மாதான் கலாய்ச்சேன். ” என்று வழிந்தபடி அவளை கட்டியனைத்தான்.

- - - - - - - - - - - - - - - - - - - - - - -

# புனைப்பெயர்

"டேய், சரவணா, நீ எழுதிய சிறுகதை 'வாசல்' வார இதழில் வந்திருக்குடா."

மூச்சிரைக்க ஓடி வந்த உயிர் நண்பன் இளங்கோவிடம் இருந்து புத்தகத்தை வாங்கிப் பார்த்தான் சரவணன். கதை சின்னச்சின்ன மாற்றங்களுடனும், அழகான ஓவியத்துடனும் பிரசுரமாயிருந்தது.

பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட வயதான பெற்றோரைப் பற்றிய கதை அது. மன்னிப்பின் மகத்துவத்தை விளக்கும், அதைப்படிக்கும் எந்தவொரு பெற்றோரும், பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டாலும் கூட அவர்களை சபிக்கமாட்டார்கள் என்பது உறுதி. ஆனால் அக்கதை மிகச்சிறிய எழுத்தில் பிரசுரமாயிருந்ததுதான் ஒரே குறை. நிச்சயம் வயதானவர்கள் படிப்பதற்கு மிகவும் சிரமப்படுவர் என்பதால், சரவணன் வருத்தமும் கோபமும் கொண்டான். கீழே அதைவிட சிறிய எழுத்தில், எழுதியவர் பெயர் இருக்க, சரவணன் கடுங்கோபம் அடைந்தான்.

"டேய், புனைப்பெயர் எல்லாம் வேண்டாம். உன்னோட சொந்த பெயரில் எழுதுடா என்று எத்தனை தடவை சொன்னேன். இப்படி ஏமாத்திட்டீயேடா?" இளங்கோ அலறினான்.

"சரி. சிறுகதைக்குரிய சன்மானம் கிடைத்தவுடன் நிச்சயம் ட்ரிட் தரவேண்டும்." என்றான் மகிழ்ச்சியாக.

அதிர்ந்த சரவணன் நிதானித்து பேசினான்.

"சரி. உனக்கு இல்லாத ட்ரிட்டா? இப்பவே தர்றேன்."

"டேய், அசத்தறடா." என்று உற்சாகமானான்.

இருவரும் கடைவீதிக்கு புறப்பட்டனர்.

தனது கதை களவாடப்பட்டதை சரவணன் அவனிடம் சொல்லவேயில்லை.

- - - - - - - - - - - - - - - - - - - - - - -

# ரேடியோ மிர்ச்சியுடன் ஒரு அனுபவம்

ஒருமுறை ‘ரேடியோ மிர்ச்சி’ - யில் சின்னதாக ஒரு போட்டி வைத்தார்கள். அடிக்கடி போட்டிகள் வைத்து பரிசுகள் வழங்கி நேயர்களை மகிழ்விப்பது அவர்கள் வழக்கம்.

போட்டி இதுதான். அமீர்கான் கிரிக்கெட்டை மையமாக வைத்து எடுக்கபட்ட ‘லகான்’ படத்தில் நடித்தார். ஷாருக்கான் பெண்கள் ஹாக்கியை மையமாக வைத்து எடுக்கப்பட்ட ‘சக்தே இந்தியா’ என்ற படத்தில் நடித்தார். அதே போல தமிழ் நடிகர்கள் ‘ஸ்போர்ட்ஸை’ மையமாக வைத்து படமெடுத்தால் யார், யார் என்னென்ன விளையாட்டை மையமாக வைத்து எடுப்பார்கள் என்று நேயர்களின் கற்பனைத் திறனுக்கு சவால் விட்டனர்.

யார், யாரோ எதை, எதையோ சொல்ல, என் பங்கிற்கு நானும் கலந்துகொள்ளலாம் என ரேடியோ மிர்ச்சியை அலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

பெயர் என்ன? அலைபேசி எண் என்ன? போன்ற வழக்கமான கேள்விகளுக்குப் பிறகு கதை சொல்ல ஆரம்பித்தேன்.

என் கதையின் நாயகன் S.J.சூர்யா. எல்லோரும் outdoor game-ஐ வைத்து எடுத்தால், நம்மாளு indoor game-ஐ வைத்து எடுக்கிறார் என்றேன்.

மிர்ச்சிக்காரர் சுதாரித்தார். ஹலோ, உங்க பேர் என்ன? செல்நம்பர் என்ன? என்று மீண்டும் விசாரிக்க ஆரம்பித்தார்.

அது ஒரு நேரடி நிகழ்ச்சி இல்லை என்பதும், அதை எடிட் செய்தே ஒலிபரப்புவார்கள் என்பதும் எனக்குத் தெரியும். நான் ஏன் அவர்களுடன் விளையாடப் போகிறேன்? சரி, நாம் S.J.சூர்யாவின் விளையாட்டிற்கு வருவோம். தொடர்ந்து கதை சொல்ல ஆரம்பித்தேன்.



நம்ம S.J.சூர்யா தேர்ந்தெடுத்த விளையாட்டு chess. S.J.சூர்யா ஹீரோயினுடன் chess விளையாடுகிறார்.தோற்றவர், ஜெயித்தவருக்கு இருகன்னங்களிலும் முத்தம் தரவேணடும் என்பது பந்தயம்.

S.J.சூர்யா தோற்க, ஹீரோயினின் இரு கன்னங்களிலும் முத்தம் கொடுத்ததோடு, உணர்ச்சி வசப்பட்டு அவரது நெற்றியிலும் ஒரு முத்தம் கொடுத்து விடுகிறார்.

“ஏன் என் நெற்றியில் முத்தமிட்டாய்?” என ஹீரோயின் கோபமாகக் கேட்கிறார்.

S.J.சூர்யா என்ன சொல்வது என்று தெரியாமல் விழிக்கிறார். பிறகு தனது வழக்கமான பாணியில் எதையோ சொல்லி சமாளிக்க முயல்கிறார்.

“எதை சொல்லச் சொல்றே? சின்னவயசுல படிச்ச ‘அ, ஆ’ ஞாபகம் வந்து ‘அ, ஆ’ - ன்னு ஒரு படமே எடுத்தேன்.

You want me to tell about that?

‘அ, ஆ’ - ன்னதும் ‘அக்கன்னா’ ( ∴ ) ஞாபகம் வந்துருச்சு. அதுதான் கன்னங்கள், நெற்றி என்று அக்கன்னா முத்தம் கொடுத்தேன்.

You want me to tell about that? ”

- என்று விளக்கியதும் ஹீரோயின் சமாதானம் ஆகிறார் என்று முடித்தேன்.

ஒரு மணிநேரம் கழித்து போட்டியின் முடிவைச் சொன்னார்கள்.

பரிசு பெற்ற இரண்டு நேயர்களில் முதலாவதாக என் பெயர் வாசிக்கப்பட்டது. thanks to mirchi.

# கம்ப்யூட்டர் உருவான வரலாறு

- கி.பி. 1999 ஆண்டு, கம்ப்யூட்டர் வாங்குவதற்கான பொருளாதார சூழலும், சந்தர்ப்பமும் வாய்த்திருந்தன.
- ஆனால், பஜாஜ் M80 வாங்க வேண்டும் என்ற ஆசை, டாப் கியரில் கிளம்பி, கம்ப்யூட்டர் வாங்க வேண்டும் என்ற ஆசையின்மீது, பலமுறை ‘எட்டு’ போட்டதால் அந்த ஆசை இருந்த தடம் தெரியாமல் மறைந்தது.
- அதன்பிறகு பத்து வருடங்களாக, கம்ப்யூட்டர் வாங்குவதற்கான பொருளாதார சூழலும், சந்தர்ப்பமும் ஒன்று கூடிவரவில்லை.
- கி.பி. 2010, மார்ச் 9 : நம் வீட்டில் கம்ப்யூட்டர் இருந்தே ஆக வேண்டும் என்று உறுதியாக முடிவெடுத்து, பணத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.
- அப்போது என்னிடமிருந்த முந்நூறு ரூபாயில், ரூபாய் 280-க்கு TVS Champ கீபோர்டு வாங்கி வீடு திரும்பினேன்.
- கி.பி. 2010, மார்ச் 3 : Intel Pentium Dual Core Processor 2.7 GHz (ரூபாய் 3000) மற்றும் Mercury ATX Cabinet Rigel (ரூபாய் 1150) வாங்கினேன்.
- கி.பி. 2010, மே 25 : Intel DG41 RQ Motherboard (ரூபாய் 2750) வாங்கினேன்
- கி.பி. 2010, ஜுன் 7 : Acer 15.6 “ LED TFT Monitor (ரூபாய் 4500) வாங்கினேன்.
- கி.பி. 2010, ஜுன் 19 : Transcend 1 GB DDR-11 RAM (ரூபாய் 1300) வாங்கினேன்.

- என்னிடமிருந்த பழைய USB Pendrive -இல், முற்றிலும் இலவசமாக கிடைக்கும் UPUNTU Operating System Install செய்து தயாராக வைத்திருந்தேன்.
- கி.பி. 2010, ஜுன் 20 : வாங்கி வைத்திருந்த அனைத்து கம்ப்யூட்டர் பாகங்களையும் Assemble செய்தேன். எனது வீட்டில் கம்ப்யூட்டர் பயன்பாட்டிற்கு வந்தது.
- கி.பி. 2010, ஜுன் 30 : Hard Disk (ரூபாய் 1650) மற்றும் Mouse (ரூபாய் 120) வாங்கினேன். Hard Disk -இல் UPUNTU Operating System Install செய்த பிறகு கம்ப்யூட்டர் முழுமையான பயன்பாட்டிற்கு வந்தது.
- கி.பி. 2010, ஆகஸ்டு 9 : Speaker (ரூபாய் 300) மற்றும் Headphone (ரூபாய் 150) வாங்கி இணைத்தேன்.
- கி.பி. 2010, டிசம்பர் 13 : DVD Writer (ரூபாய் 1200) வாங்கி இணைத்தேன்.
- குறிப்பு 1: “எனது வீட்டில் கம்ப்யூட்டர் உருவான வரலாறு” - என்பதுதான் தலைப்பு. நீளமாக இருக்கிறது என்பதால் சுருக்கிவிட்டேன். ஹி....ஹி....
- குறிப்பு 2: அடிப்படையில் நான் ஒரு Computer Engineer என்பதால் இப்படி ஒரு நிதானமான.... நீண்டகால.... ஆக்கம்.
- குறிப்பு 3: இலவச லேப்டேப்புகளை பெறவிருக்கும், தமிழக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் +1, +2 பயிலும் மாணவச் செல்வங்களுக்கு, அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!



For More Details About My Computer Configuration ,
Visit : www.somecomptips.blogspot.com

## திக்....திக்....தீம்பார்க் - அனுபவம்

இது ஏதோ தீம்பார்க் ஒன்றில், நான் திக்....திக்.... என்று திகிலுடன் கழித்த அனுபவத்தை சொல்லப்போகிறேன் என்று நினைத்துவிடாதீர்கள். விஷயமே வேறு.

சில வருடங்களுக்கு முன்பு, நான் கல்லூரியில் படிக்கும்போது, தீம்பார்க் ஒன்றிற்கு குடும்பத்துடன் சென்றிருந்தோம். செயற்கை கடல், செயற்கை அருவி, ராட்சஷ ராட்டினங்கள், நீர் சறுக்கு விளையாட்டுக்கள், ரோலர் கோஸ்ட்டர்.... என பலப்பல அருமையான விஷயங்கள். மகிழ்ச்சியான பொழுதுபோக்கை அந்த தீம்பார்க் தந்தது.

சில வாரங்களுக்கு பிறகு தனியார் தொலைக்காட்சி ஒன்று நடத்திய அலைபேசி வழி போட்டியில் என் சகோதரிக்கு பரிசு கிடைத்தது. நாங்கள் சென்று வந்திருந்த தீம்பார்க்கிற்கான இரண்டு இலவச அனுமதிச்சீட்டுதான் அது.

அது பரிட்சை நேரம் என்பதாலும், அப்போதுதான் அந்த தீம்பார்க்கிற்கு சென்று வந்திருந்ததாலும், வீட்டில் யாருக்கும் அங்கு செல்ல விருப்பமில்லை. எனக்கு மட்டும் அந்த வாய்ப்பை விட்டுவிட விருப்பமில்லை. குறிப்பிட்ட நாளில் நான் அங்கு உறுதியாக செல்லவிருப்பதை தெரிவித்து விட்டேன். கடைசி நேரத்தில் என் குடும்பத்தினர் யாரேனும் என்னுடன் வரக்கூடும் என்பது எனது நம்பிக்கை. என் நம்பிக்கை பொய்த்துவிட, குறிப்பிட்ட நாளில் அவசரமாய் நண்பர்கள், உறவினர்கள் என ஒருசிலரிடம் உடன்வருமாறு கேட்க, கடைசி நேரத்தில் கேட்டமையால், அவர்களும் மறுத்துவிட்டனர். வேறுவழியின்றி நான் மட்டும் தீம்பார்க்கிற்கு சென்றேன்.



தீம்பார்க்கின் நுழைவு வாயிலில் இருந்த பணியாளருக்கு திக்கென்றது. தனியாக வந்த என்னை அனுமதிப்பதா, வேண்டாமா என அவருக்கு குழப்பம். அவரிடம் என் சூழ்நிலையை விளக்கினேன். அவர் தனது மேலதிகாரியுடன் ஆலோசித்துவிட்டு, அரைமனதாய் என்னை அனுமதித்தார்.

அகில உலக சரித்திரத்திலேயே தீம்பார்க் ஒன்றிற்கு தன்னந்தனியாக சென்ற முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன் என்று நினைக்கிறேன்.

வழக்கமாய் அங்கு வருபவர்களை கண்காணிக்கவும், அவர்களுக்கு உதவவும் அமர்த்தப்பட்ட பணியாளர்கள் அனைவரிடமும், தன்னந்தனியாக வந்திருக்கும் என்னைப் பற்றிக் கூறி, என்னை பிரத்யேகமாக கண்காணிக்கும்படியாக கூறியிருப்பார்கள் போலும். பணியாளர்களின் திக்....திக்.... பார்வையில் என்னால் அதை உணர முடிந்தது. தனிமை என்றும் சந்தேகத்திற்குரியதுதானே!?

தனிமை போரடிக்க, சங்கடத்துடன் எனக்குப் பிடித்த நீர் சறுக்கு விளையாட்டை மட்டும் சிறிது நேரம் விளையாடிவிட்டு வீடு திரும்பினேன்.

அடுத்த கோடைவிடுமுறையில் மீண்டும் குடும்பத்துடன் அங்கு சென்று மகிழ்வுற்றோம்.

## தீம்பார்க் செல்லவிருக்கிறீர்களா....!
## சில ஆலோசனைகள்:

* குடும்பத்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள் என எவ்வளவு கும்பல் சேர்த்துச்செல்கிறீர்களோ, அவ்வளவு குதுாகலம் நிச்சயம். மொத்தமாக டிக்கெட் புக் செய்பவர்களுக்கு கட்டணச்சலுகை கிடைக்கக்கூட வாய்ப்பிருக்கலாம்.

* கொடுத்த காசுக்கு எல்லா விளையாட்டுக்களையும் விளையாடியே தீருவேன் என்று உடல்நலனை கெடுத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் வயது, உடல்வாகு ஆகியவற்றை கருத்தில்கொண்டு, உங்களுக்கு பிடித்த விளையாட்டுக்களை மட்டும் விளையாடுங்கள்.

* தீம்பார்க்கில், ஒரு நாளில் பகல் முழுவதும் செலவழிக்க வாய்ப்பு உண்டு. எனவே காலையில் உள்ளே சென்றவுடன், நீர்விளையாட்டுக்களை விளையாட ஆரம்பித்துவிடவேண்டாம். முதலில் இராட்டினம் போன்ற பிற விளையாட்டுக்களை விளையாடுங்கள். பிறகு வெயில் உச்சத்திற்கு வந்தபிறகு, நீர்விளையாட்டுக்களை விளையாடுங்கள்.

* நீர்விளையாட்டுக்கென பிரத்யேக ஆடைகளையும், தலைதுவட்ட துண்டுகளையும் மறவாமல் உடன் எடுத்துச் செல்லுங்கள். இல்லாவிட்டால் அவற்றை அங்கு விலைக்கோ, வாடகைக்கோ வாங்க நேரிடலாம்.

* கண்ணாடி அணியும் வழக்கம் உள்ளவர்கள், கண்ணாடியை கழட்டி வைக்க, கண்ணாடிக் கூடை மறவாமல் எடுத்துச்செல்லுங்கள்.

* குழந்தைகளை சுதந்திரமாக விளையாடவிட்டாலும், அவர்கள் பெரியவர்களின் கண்காணிப்பில் இருக்கட்டும்.

* தீம்பார்க்கில், ஒரு நாளின் பகல் முழுவதும் செலவழிக்க வாய்ப்பு உண்டு. எனவே மறுநாள் உடல்சோர்வு ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே அங்கு செல்பவர்களுக்கு, மறுநாள் விடுமுறை நாளாக இருத்தல் நலம்.

* பொழுதுபோக்கு என்ற பெயரில், திரும்பத்திரும்ப திரைப்படங்களுக்கே செல்லாமல், அவ்வப்போது, குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒருமுறையாவது, இதுபோன்ற தீம்பார்க்குகளுக்கு குடும்பத்துடன் சென்றுவருவது, குடும்ப உறுப்பினர்களிடையே அன்னியோன்யத்தை வளர்ப்பதுடன், உடல்நலன் மற்றும் மனநலன் வளம்பெற வழிவகுக்கும்.

# மோர்

'மோர்' என்றதுமே ஒரு சம்பவம் அடிக்கடி நினைவில் வந்துவிடுகிறது.

ஒருமுறை மதுரை சிம்மக்கல் அருகே உள்ள ஒரு தியேட்டரில் 'நெத்தி அடி' படம் பார்க்கச்சென்றேன். நின்றுகொண்டிருந்த பேருந்தின் பின்புறமிருந்து பிரதான சாலையை கடக்க முற்பட்டேன்.

'டமால்' என்றொரு சத்தம். ஏதோ பறப்பது போலிருந்தது. நல்லவேளையாக என் மீது மோதியது ஒரு பைக். லேசான சிராய்ப்பு காயங்களுடன் தப்பித்தேன்.

அங்குள்ளவர்கள் சாலையில் விழுந்துகிடந்த என்னைத் தூக்கி ஓரமாக அமரவைத்து ஆசுவாசப்படுத்தினர்.

மோர் வாங்கிக்கொடுத்து குடிக்கச் செய்தனர். அவர்களுக்கு என் நன்றிகள் பல.

எனவே நின்றுகொண்டிருக்கும் வாகனத்தின் பின்புறமிருந்து சாலையைக் கடக்க வேண்டாம். குறிப்பாக குழந்தைகளுக்கு இதை சொல்லுங்கள்.

கடவுளே! NO MORE மோர்.

## காதோடுதான் நான் பேசுவேன்....

ஒருமுறை மாநகராட்சி நீச்சல் குளத்தில் நீச்சல் பழகச் சென்றிருந்தேன். மறுநாளில் இருந்து இடது காதில் இரைச்சல் ஆரம்பமானது. இடைவிடாத இரைச்சல். நின்றால், நடந்தால், படுத்தால்... இரைச்சல்... இரைச்சல்... நிம்மதியாக வேலை செய்ய முடியவில்லை. டி.வி பார்க்கமுடியவில்லை.

இரைச்சலுக்கு என்ன காரணம்? எனக்குள் பலத்த யோசனை. காதிற்குள் நீச்சல்குள நீர் புகுந்து, கிருமித் தொற்று ஏற்பட்டு இருக்கலாமோ? காது குடையும்போது புண் ஏற்பட்டு, சீழ்பிடித்து இருக்குமோ?

ஒரு வாரம் தொடர்ந்தது இந்த தொந்தரவு.

காது இரைச்சல் எப்படி இருக்குமென்று கேட்கிறீர்களா? உங்கள் இடதுகை சுண்டுவிரலை இடது காதிற்குள் நுழைத்து இருபது வினாடிகள் ஆடாமல், அசையாமல் அழுத்தி வைத்திருங்கள். கேட்கிறதா மெல்லிய இரைச்சல்? இதைவிட சற்று அதிகமாகவே இருக்கும்.

பிறகு காது, மூக்கு, தொண்டை மருத்துவரிடம் சென்றேன். காதில் ஒரு கருவி மூலம் தண்ணீரை பீய்ச்சி அடித்து, வெள்ளையாக எதையோ எடுத்துக் காட்டினார் அவர். பிறகு மருந்துவிட்டார். வேறு எதையும் அவர் சொல்லவில்லை.

உடனே காதில் இரைச்சல் நின்றுவிட்டது.

நினைத்துப்பாருங்கள்.... ஒருவாரமாக நிம்மதியை கெடுத்து பெரும்தலைவலியாய் இருந்த காது இரைச்சல், சட்டென்று நின்றுபோனால் எப்படி இருக்கும்? எனக்கென்னவோ ஏதோ புதிய காதை வாங்கி வைத்துக்கொண்டதுபோல ஒரு உணர்வு.

"HAPPY NEW EAR" - என்று ஆர்பாட்டமாக கத்தி, பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கிக் கொண்டாடலாம் போலிருந்தது.

சரி, விஷயத்திற்கு வருகிறேன்.

ஜலதோஷம் பிடித்திருக்கும் வேளையில், மூக்கின் ஒரு துவாரத்தை மூடிக்கொண்டு, மற்றொரு துவாரம் வழியாக சளியை அழுந்த சிந்தும்போது, சளி வெளியேறாத நிலையில், சளி உட்புறமாக காதிற்குள் சென்றுவிடக்கூடிய வாய்ப்பு உண்டு. இதுவே எனது காது இரைச்சலுக்கு காரணம். பின்னாளில் நாளிதழ் வாயிலாக தெரிந்துகொண்ட விஷயம் இது.

அன்றுமுதல் மூக்கை முழு அழுத்தத்தோடு பலமாக சிந்தும் பழக்கத்தை விட்டுவிட்டேன்.

மருத்துவர்கள் நோய்க்கு மருத்துவம் பார்ப்பதோடு நின்றுவிடாமல், அந்நோய் உண்டாவதற்கான காரணங்களை விளக்கி, எதிர்காலத்தில் மீண்டும் நோய் வராமலிருக்க தகுந்த ஆலோசனைகளையும் வழங்கலாம் என்பது என் தாழ்மையான கருத்து.

# கவிதைகள்

## தவிப்பு

வைத்தஇடம் தெரியாமல்
தேடும்பொழுது
இரட்டிப்பாகிறது
மூக்கு கண்ணாடியின் தேவை.



-----------------------

## வசியம்

மனோதத்துவ மருத்துவரின்
நாற்சக்கர வாகன முகப்பில்
ஊசலாடுகிறது....
கடவுள் பொம்மை.

-----------------------

## சும்மா

“ஐய்யய்யே!”
அவதியுடன்
அடிக்கடி பயன்படுத்துகிறோம்
இலவச கழிப்பறைகளை....

---

## அறிவிப்பு

அழகான கோவில் கோபுரம்
ஆர்பாட்டமான அறிவிப்பு.

அலகு குத்துதல்,
பூக்குழி இறங்குதல்,
மாபெரும் அன்னதானம்,
இன்னிசை நிகழ்ச்சி,
தமிழ் பட்டிமன்றம் என
நிகழ்ச்சிநிரல்
தேதிவாரியாக....

ஆடிமாத அறிவிப்பை
ஆவணியிலும் பார்க்கக்கூடும்....

சன்னதி வாசலில்
நாவற்பழம் விற்கும் மூதாட்டிக்கு
நிழல்தரும் தட்டியாக....

---

## நகைச்சுவை துணுக்குகள்

“எல்லா படங்களிலேயும் விதவிதமாக மேக்கப் போட்டு நடிப்பாரே ஒரு நடிகர், அவர் ஏன் இப்ப படங்களில் நடிக்கிறது இல்லை?!”

“யோவ், அவர் நடிச்சுக்கிட்டுத்தான் இருக்கார். நமக்குத்தான் அவரை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.”

---

நடிகை : ஸார், இவர்தான் என்னோட ‘கார்டியர்’.

டைரக்டர் : கார்டியன்னு சொல்லணும்மா.... இங்கலீஷ்ல இன்னும் வீக்காவே இருக்கியே!

நடிகை : இல்லை ஸார், இவர் என்னோட கார் டிரைவராக இருந்து கணவராகிவிட்டார். அதனாலதான் அப்படி சொன்னேன்.

---

“சினிமா சூட்டிங் ரொம்ப போர். ஒரே ஷாட்டை பத்து பதினெஞ்சு ‘டேக்’ எடுக்கிறாங்க....”

“அப்படி என்ன ஷாட் எடுத்தாங்க?”

“ஹீரோ, கீழே கிடக்கிற பேனாவை குனிஞ்சு எடுக்கிறார்.”

---

நிருபர் : அந்த நடிகைக்கு விவரமே பத்தாது.

சகநிருபர் : எதை வைச்சு சொல்றீங்க?

நிருபர் : அந்த நடிகையிடம் மேக்கப் டிப்ஸ் கேட்டதுக்கு, உங்களுக்கு எதுக்கு டிப்ஸ் தரணும்? மேக்கப் போட்டவரையே கூப்பிடுங்க.... அவர் கையிலேயே கொடுத்திடுறேன்னு சொல்லிட்டாங்க.

“அந்த படத்தில், தொப்புளில் நகைபோட்டு அல்ட்ரா மாடர்ன் பெண்ணாக உலா வருகிற ஹீரோயின் கடைசியில் அடக்க ஒடுக்கமான குடும்ப பெண்ணாக மாறிவிடுகிறார்.”

“எப்படி?”

“கல்யாணத்திற்கு பிறகு, ஹீரோயினோட எல்லா நகைகளையும், ஹீரோ அடகு வைத்துவிடுகிறார்.”

---

“படிக்கிற பொண்ணை நடிக்க வருகிறாயான்னு கேட்டதுக்கு தர்மஅடி கொடுத்திட்டாங்க.”

“நியாயந்தானே!”

“நீங்க வேற, அந்த பொண்ணு பிலிம் இன்ஸ்டிடியூட்டில் ஆக்டிங் கோர்ஸ்தான் படிக்கிறா....”

---

“தூது வந்த புறாவை வருடிக்கொடுக்கக்கூட மன்னர் தயங்குகிறாரே!”

“புறாவின் முதுகைப் பார்க்கும்போதெல்லாம் மன்னருக்கு ‘புறமுதுகு’ என்ற வார்த்தை நினைவில் வந்து பாடாய் படுத்துகிறதாம்.”

---

மனைவி: “என்னங்க, புதுசா சேலை, ஜாக்கெட், பாவாடை, பிரா எல்லாம் வாங்கணும்.... ஆயிரம் ரூபாய் கொடுங்க.”

கணவன்: “எங்கிட்ட ஏழுநூறுதான் இருக்கு. பிராப்தம் இருந்தா பிரா வரை வாங்கிக்க....”

---